1978 செப்டம்பர் 7] [திரு. செ. அரங்கநாயகம்]

தரப்படவேண்டுமென்ற ஒரு முறை இருந்து வருகிறது. அப்படிப் பட்ட ஒரு முயற்சியைப் பரவலாக மாணவர்களிடையே தருவது நல்லதுதான். அதற்கான ஒரு முறையை இந்த அரசு மேற்கொள்ள விரும்புகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 15 மாணவர்களுடைய உயிரைப் பலிகொண்ட இந்தக் கோரச் சம்பவம் அனைவருடைய உள்ளத்தையும் உருகச்செய்யும் சம்பவம் ஆகும். இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது உல்லாசப் பயணிகள் எடுத்துச்செல்கின்ற படகை எடுத்துச்செல்லாத காரணத்தால் தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதற்குக் காரணமாணவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படு மென்றும் உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுமென்றும் அறிவித்திருப்பதற் காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த இறந்த மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பினால் இனிமேல் இப்படி உல்லாச பயணம் செல்லும் மாணவர்களுக்கு முன் எச்சரிக்கையாக இருக்கும் என்ற அடிப் படையிலே அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நினைவுச் சின்னங்கள் எழுப்புவதற்கான உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால் இந்தப் படகு விபத்திலே சிக்கிக் கொண்ட பேர்களை தப்புவிக்கின்ற முயற்சியிலே அண்ணாமலை என்ற மாணவன் வெற்றிப்பெற்றிருக் கிறான், அவனது வீரமிக்க துணிச்சலான சேவையைப் பாராட்டு வதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளை கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.